

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் காணொளிக் காட்சி வாயிலாக போக்குவரத்துத் துறை சார்பில் புதிய விரிவான மினி பஸ் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில், மாவட்ட ஆட்சியர் ஷே.ஷேக் அப்துல் ரகுமானின் தலைமையில் விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன், விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சரவணன், வருவாய் கோட்டாட்சியர், பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா.கேசவன், நகர்மன்ற உறுப்பினர் புல்லட் மணி, வார்டு செயலாளர்கள் தங்கம், சுபாஷ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நன்னாடு முத்துசாமி, எம்.சி.ராம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி பேரூராட்சியில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் தார்சாலை மேம்படுத்துதல் பணிகளுக்கு நேற்று முன்தினம் (15.06.2025) அடிக்கல் நாட்டி வைத்து பணிகளை தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, கன்னங்குறிச்சி பேரூராட்சித் தலைவர் குபேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### 75 கி.மீ. தூரம் இருவர்ணக் கொடிகள்! இன்று

# சிவகங்கை வருகை தரும் துணை முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில்!

சிவகங்கை, ஜூன் 17 -

இன்று (17ஆம் தேதி) சிவகங்கை மாவட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். காலை முதல் மாலை வரை அரசு மற்றும் கட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். இது குறித்து நேற்று முன் தினம் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் தனியார் மகாலில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது .

இந்த கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் துணை முதலமைச்சர் வருகை குறித்து அவரது நிகழ்ச்சிகள் குறித்து விரிவாக விளக்கிப் பேசினார்.

இந்த கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்டக் கழக துணைச் செயலாளர் த. சேங்கைமாறன் மற்றும் ஒன்றிய நகர நிர்வாகிகள் பேசினார்கள் .

இந்த கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இன்று (17ஆம் தேதி) சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழக முதல்வர் தலைவர் கழகத் தளபதி அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் செயல் திட்டங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுமக்களுக்கு கொண்டு சேர்த்திடும் வகையில் இன்று சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதல்வர் அவர்களுக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

இவரது நிகழ்ச்சியில் அனைத்து மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, கழக பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர் தா.ராமையா, முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, அம்பலமுத்து, பி.டி. ஆர்.முத்து, நகர் கழக செயலாளர்கள் சி.எம்.துரை. ஆனந்த், பெரி.பாலா, க. பொன்னுச்சாமி, துணை மேயர் மாநகரச் செயலாளர் நா.குணசேகரன், செயற்குழு உறுப்பினர் மேயர் எஸ்.முத்துதுரை, ஒன்றிய கழகச் செயலாளர்கள் சுப. சின்னத்துரை, கே.எஸ். ஆனந்த், நாகனிரவி , பூபால சிங்கம், லெ.மு.ரவிச்சந்திரன், எஸ்.சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம், குன்னக்குடி சுப்பிரமணியன், நா . நெடுஞ்செழியன் பூமணி, கே.பாலசுப்பிரமணியன், எம். ஜெயராமன், பெமந்த காளை, திருமலை முத்துராமலிங்கம், அண்ணாதுரை, துரைராஜாமணி, அ. முத்துச்சாமி, ஆறு. செல்வராஜன், ஆர்.எம்..கென்னடி, வே.தமிழ்மாறன், கா.வெங்கட்ராமன், கென்னடி, வே.ஆரோக்கியசாமி, யோக. கிருஷ்ணகுமார், எம்.ஏ.கடம்ப சாமி, திருமதி வசந்தி சேங்கை மாறன், சுப்பிரமணியன், பேரூர் கழக செயலாளர்கள் தி.கதிர்வேல், கார்த்திகேயன், அசோக் பீ.ஏ.நஜ்முதீன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் மாவட்டக் கழக செய்தி தொடர்பாளர் அ. அயூப்கான் மற்றும் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள், அனைத்து அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

இன்று (17ஆம் தேதி) வருகைதரும் துணை முதலமைச்சர் அவர்களின் வருகை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட எல்லையான பூவந்தியிலிருந்து சிவகங்கை, சோமபுரம், ஒக்கூர், மதகுபட்டி, திருக்கோட்டியூர், திருப்பத்தூர் வரை சுமார் 75 கிலோமீட்டர் தூரம் கழகக்கொடிகள் கட்டப்பட்டுள்ளது. வண்ண கழக தோரணங்கள் அமைக்கப்பட்டுள்ளது. 75 கிலோமீட்டர் தூரம் வரை வரவேற்பு சுவர் விளம்பரங்கள் இடம்பெற்றுள்ளது.

**திருப்புவனத்தில் சிறப்பான வரவேற்பு!**

இன்று துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். காலை 9 மணி அளவில் மதுரையில் இருந்து கார் மூலம் வருகை தரும் துணை முதலமைச்சருக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் திருப்புவனத்தில் மாவட்டக் கழகத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது .

அதனைத் தொடர்ந்து 9.30 மணிக்கு கான்பூர் கண்மாயில் ரூபாய் 41கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கண்மாய் மராமத்து பணிகளை ஆய்வு செய்கிறார். அதை தொடர்ந்து 10.00மணி அளவில் சிவகங்கை முதல் நகர்மன்றத்தலைவர் கழக மூத்த முன்னோடி சொ.லெ.சாத்தையா வீட்டில் அவரை சந்தித்து உடல் நலம் விசாரிக்கிறார். 10.30 மணி அளவில் சிவகங்கை தாலுகா சோழபுரத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி ஏற்பு திட்ட பணிகளை பார்வையிடுகிறார். பகல் 11 மணியளவில் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெறும் மாவட்ட அளவில் நடைபெற்றுவரும் அரசு திட்டப் பணிகள் செயல்பாடுகள், அதன் முன்னேற்றங்கள் குறித்து மாவட்ட அனைத்து அரசுத்துறை அதிகாரிகளுடன் ஆய்வு நடத்துகிறார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான திடலில் முடிவுற்ற அரசு திட்டப் பணிகளை துவங்கி வைத்தும் புதிதாக திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் விழா பேரூரையாற்றுகிறார். விழா மேடையில் பல்வேறு அரசு துறைகளில் சார்பில் 500க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

**கார் மூலம் மதுரை பயணம்!**

அதனைத் தொடர்ந்து மாலை 4 மணி அளவில் கார் மூலம் திருப்பத்தூர் செல்லும் துணை முதலமைச்சர் அவர்கள் திருப்பத்தூர் சிவகங்கை சாலையில் உள்ள தனியார் மகாலில் அனைத்து சார்பு அணி நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசனை நடத்துகிறார். அதைத் தொடர்ந்து ஆர்.கே .மஹாலில் மாவட்ட இளைஞரணி ஒன்றிய, நகர,பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களைச் சந்தித்து பேசுகிறார். மாலை 6:45 மணிக்கு கார் மூலம் மதுரை செல்கிறார். மதுரையில் இருந்து விமானம் மூலம் சென்னை செல்கிறார். இன்று சிவகங்கை வருகை தரும் துணை முதலமைச்சர் அவர்கள் மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் மாவட்ட ஒன்றிய , நகர, பேரூர், கழக நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகளை செய்துள்ளார்கள். துணை முதல்வர் அவர்கள் வருகையினை முன்னிட்டு சிவகங்கை மாவட்டமே விழாக்கோலமாக காணப்படுகிறது.

### சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமில்

# சேலம் மாவட்டத்தில் 6.81 இலட்சம் கால்நடைகள் பயன்பெற்றன!

## முகாமினை தொடங்கி வைத்து அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சேலம், ஜூன் 17-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி, சாய்பாபா காலனி பகுதியில் 15.06.2025 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:-



முதலமைச்சர் அவர்கள் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் இன்றையதினம் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் சுமார் 6.81 இலட்சம் கால்நடைகள் உள்ளன. கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாக 149 கால்நடை மருந்தகங்களும் 7 நடமாடும் மருந்தகங்களும், 7 கால்நடை மருத்துவமனைகளும் மற்றும் ஒரு கால்நடை பன்முக மருத்துவமனையும் கால்நடைகளுக்கு சிகிச்சை மற்றும் இதர கால்நடை பராமரிப்பு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

கால்நடைகளின் நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு ஒன்றியத்திற்கு 20 முகாம்கள் வீதம் மொத்தம் 240 சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. கோமாரி நோய், பெரியம்மை நோய், கன்று வீச்சு நோய், அடைப்பான் நோய், ஆட்டுக்கொல்லி நோய் மற்றும் கோழி வெள்ளை கழிச்சல் நோய் போன்ற நோய்களுக்கான தடுப்பூசி மற்றும் சிகிச்சைப்பணிகள் இம்முகாமின்போது மேற்கொள்ளப்படுகின்றன.

இம்முகாமில், கால்நடைகளுக்கு சிகிச்சை, குடற்புழு நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், சினை ஆய்வு, சினை பருவ ஒருங்கிணைப்பு, மலடு நீக்கம், சிறிய அளவிலான அறுவை சிகிச்சைகள், சினையுறா மாடுகளுக்கு நவீன ஸ்கேன் கருவிகள் மூலம் ஆய்வு, புற ஒட்டுண்ணிகள் நீக்கம் ஆகிய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகிறது. கால்நடை நோய் புலனாய்வு பிரிவின் மூலம் கால்நடைகளுக்கான தோல் நோய்கள், சாணம், ரத்தம், சளி, பால் ஆகிய மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதற்கான உரிய மருத்துவச் சிகிச்சை கள் அளிக்கப்படுகிறது. குறிப்பாக, பசு மற்றும் எருமைகளுக்கு செயற்கை முறை கருவுட்டலும், சினையுறாத மாடுகளுக்கு சிறப்பு ஸ்கேன் பரிசோதனையும் செய்து உரிய சிகிச்சை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக கால்நடை வளர்ப்போரின் இல்லங்களுக்கே சென்று கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை வழங்கிடும் வகையில் சேலம் மாவட்டத்தில் 15 நடமாடும் வாகனங்கள் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ளன. இதன் தொடர்ச்சியாக இன்றையதினம் கெங்கவல்லி வட்டாரத்திற்கான மேலும் ஒரு நடமாடும் வாகனம் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கால்நடை வளர்ப்போர் பொருளாதார ரீதியாக பயன் பெறும் வகையில் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் பாலின பாகுபாடு செய்யப்பட்ட உறைவிந்து குச்சிகள் மூலம் கருவூட்டல் செய்து கிடேரி கன்றுகள் மட்டும் ஈனும் வகையிலான திட்டம் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டு அதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கால்நடை விவசாயிகளுக்கு சிறப்பாக கிடாரி கன்றுகள் வளர்த்தமைக்கான பரிசுகளும், கால்நடை ஊட்டச்சத்து பொருட்களும் வழங்கப்பட்டது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர்இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கன்னங்குறிச்சி பேரூராட்சியில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் சேலம் ஏற்காடு ரோடு, பச்சா ரோடு குறுக்குத்தெரு, எல்.பி.செட்டி தெரு, சின்ன மாரியம்மன் கோயில் தெரு, குறிச்சா நாராயணன் தெரு, ஆறுமுக ஐயர் தெரு உள்ளிட்ட இடங்களில் தார் சாலை மேம்படுத்துதல் பணிக்கு அடிக்கல் நாட்டி வைத்து பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.பிரகாசம், துணை இயக்குநர் மரு.தமிழரசு, உதவி இயக்குநர் மரு.ரகுபதி, கன்னங்குறிச்சி பேரூராட்சி தலைவர் குபேந்திரன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள், கால்நடை வளர்ப்போர் கலந்து கொண்டனர்.



இருசக்கர வாகன விபத்தில் எலும்புமுறிவு ஏற்பட்டு விழுப்புரம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் விக்கிரவாண்டி மத்திய ஒன்றியச் செயலாளர் ஜெ.ஜெயபாலை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். பின்னர் எலும்பு முறிவு மருத்துவர் மணிகண்டன், திருமாவளவனிடம் மருத்துவ சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கல்பட்டு வி.ராஜா, நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் காளிதாஸ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆர்.ஏ.சதிஷ், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கேபிள் சுரேஷ்பாபு, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் பூபாலன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கலைச்செல்வன், ஒன்றிய துணைச் செயலாளர் ராம்குமார், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி அமைப்பாளர் மூ.தேவா, வி.சாலை ராமலிங்கம், குமரவேல், தும்பூர் செல்வம் விக்கிரவாண்டி கே.அசோக்குமார், கே.தினேஷ், ஊராட்சி மன்ற தலைவர் வேலு, வீரப்பன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஐ.கே.எஸ். சங்கர், கிளைச் செயலாளர் சுதாகர், உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, கோலியனூர் மத்திய ஒன்றிய செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், கோலியனூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் கப்பூர் கே.என்.பி.ராஜா, கோலியனூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா.கேசவன், மாவட்ட கவுன்சிலர் வனிதா ஹரிராமன், ஒன்றிய துணை பெருந்தலைவர் உதயகுமார், ஒன்றிய அவைத் தலைவர்கள் ராமகிருஷ்ணன், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், ஒன்றிய துணை செயலாளர்கள் பட்டு ஆறுமுகம், ஞானவேல், ஜெயா பன்னீர்செல்வம், மாவட்டப் பிரதிநிதி கிருஷ்ணமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர்கள் சொல்லின் செல்வம், தனசேகர், தேவி ரமேஷ், மோகனா பாலமுருகன், பிரசன்னா, சத்ய ராஜேந்திரன், ஒன்றிய கவுன்சிலர்கள் சிவகுமார், தேனருவி பட்டு மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



அயலக திராவிட முன்னேற்ற கழகம் குவைத் தி.மு.க. தளபதி பேரவை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு குவைத்தில் உள்ள பாயில் ஷிப்பா அல் ஜாசிரா மருத்துவமனை (Fahaheel Shifa Al Jazeera) மாபெரும் இலவச மருத்துவ முகாம் குவைத் தி.மு.க. தளபதி பேரவையின் அமைப்புச் செயலாளர் மேட்டுபட்டி இராஜா முகமது தலைமையில் குவைத் தி.மு.க. தளபதி பேரவையின் ஒருங்கிணைப்பாளர் இராணிப்பேட்டை கிளாட்வின், நபில் ராஜா, அவைத் தலைவர் எதுமலை பாவாசா, விட்டுக்கட்டி மஸ்தான், பாண்டி ஜாஹிர் உசேன், சதக்கத்துல்லா, காளிதாசன், சாமி, மங்களேஸ்வரன், அப்துல் சாஃபி அல்லா, பிச்சை, முகமது சலீம் முன்னிலையில் நடைபெற்றது. மருத்துவ முகாமை தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர். டி.எம்.கதிர் ஆனந்த், தி.மு.க. அயலக அணி மாநில செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி., காணொளி (Zoom Meeting) மூலம் கலந்து இலவச மருத்துவ முகாமை தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள், அமைப்பின் மாணவரணிச் செயலாளர் நபில் ராஜா நன்றி கூறினார்.